ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

गावः क्रीता बलिन इह मे निर्मितं साधु सौधै-
र्युक्तं केलीसदनममलं चाल्पमूल्येन किं च ।
वित्तं सम्पादितमतिमहत् क्षेत्रमप्यार्जितं द्राक्
इत्येतस्माज्जडमतिरहो मन्यते धन्यमीश ॥ ॥११॥

காவ꞉ க்ரீதா பலிந இஹ மே நிர்மிதம் ஸாது ஸௌதை-
ர்யுக்தம் கேலீஸதநமமலம் சால்பமூல்யேந கிஞ்ச ।
வித்தம் ஸம்பாதிதமதிமஹத் க்ஷேத்ரமப்யார்ஜிதம் த்ராக்
இத்யேதஸ்மாஜ்ஜடமதிரஹோ மந்யதே தந்யமீஶ ।

ஹே ஈச! மிகவும் பலத்துடன்கூடிய காளைகள் வாங்கியாய்விட்டன. சிறந்த மாடிகளுடன்கூடிய சுத்தமான லீலாகிருகம் அற்ப பொருட்செலவில் கட்டியாய்விட்டது. பொருளும் அதிகமாக வேண்டியவரையில் தேடியாய்விட்டது; உத்தமமான பூமிகளும் வாங்கியாய்விட்டன என்று இவைகளால் ஜடமான புத்தியானது செய்யவேண்டிய காரியத்தைச் செய்தாய்விட்டது. ஆகையால் நான் தந்யன் என்று கருதுகின்றது. கஷ்டம்!

மானிடப்பிறவியைப் பெற்றவர்கள் செய்யவேண்டிய முக்கியமான பகவதாராதனங்களைச் செய்து ஜன்மஸாபல்யத்தையடையாமல் வீடு, மாடு, பொருள், பெண்டீர் முதலானவைகளைப் பெற்றுவிட்டோம், நாம் மிகவும் தந்யனுகிறோமென்று நினைப்பது ஸரியல்ல. இப்பிறவிக்குற்ற செய்கை இவையல்லவென்பதையும் ஒரு பெரியார்

किं दानेन धनेन वाजिकरिभिः प्राप्तेन राज्येन किं
किं वा पुत्रकलत्रमित्रपशुभिः देहेन गेहेन किम् ।
ज्ञात्वैतत्क्षणभंगुरं सपदि रे त्याज्यं मनो दूरतः
स्वात्मार्थं गुरुवाक्यतो भज भज श्रीपार्वतीवल्लभम् ॥

கிம் தாநேந தநேந வாஜிகரிபி꞉ ப்ராப்தேந ராஜ்யேந கிம் கிம்
வா புத்ரகளத்ரமித்ரபஶுபி꞉ தேஹேந கேஹேந கிம் । ஜ்ஞா
த்வைதத்க்ஷணபங்குரம் ஸபதி ரே த்யாஜ்யம் மநோ தூரத꞉
ஸ்வாத்மார்த்தம் குருவாக்யதோ பஜ பஜ ஸ்ரீபார்வதீவல்லபம் ।

பொருள், பெண்டீர், புத்திரன், பசு, மித்திரன், ராஜ்யம், இந்த சரீரம் இவைகளால் என்ன பயன்? ஹே மனமே! இவையாவும் நீர்க்குமிழிபோல் மிகவும் நச்வரமெனக் கருதி ஸத்குருவின் அனுக்கிரஹத்தால் உமாகாந்தனை ஸ்ரீ பரமேச்வரனை எப்பொழுதும் ஸேவி என்று கூறியிருக்கிறார். ஆகையால் ஸகலஜனங்களும் பகவானையுபாஸித்து அவருடைய அனுக்ரஹத்தைப் பெறவேண்டியது முக்கியம். சுபம். உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.
விபவ-ஷூ ஆவணி-மீ கஉ

## "உபதேசபஞ்சகம்"

(354-வது பக்கத்தொடர்ச்சி.)

ब्रह्मैकाक्षरमर्थ्यताम् । ப்3ரஹ்மைகாக்ஷரமர்த்2யதாம் ॥

அதிகமான பக்திசிரத்தையுடன் குரு சுச்ரூஷை செய்துகொண்டு நாம் அவர்கள் முகமாக அறிந்துகொள்ளவேண்டிய விஷயம் எது என்று சிஷ்யனுக்கேற்படும் சங்கைக்கு விடை பகருகிருர். இக்கொடிய ஸம்ஸாரபந்தத்திலிருந்தும் விலகுவதற்கும் என்றுமழிவில்லாத ஆனந்தத்தைப் பெறுவதற்கும் முக்கிய காரணமாய் விளங்கும் பரமாத்மஸ்வரூபத்தைப் போதிக்கும் எழுத்துக்களையும் பதங்களையும் வாக்கியங்களையும் உபதேசிக்கும்படி ஆசார்யாளைப் பிரார்த்தித்து அவ்வித விஷயங்களையே எப்பொழுதும் கிரஹிக்க வேண்டும். இக்கருத்தையே

लब्ध्वा कथञ्चिन्नरजन्मदुर्लभं तत्रापि पुंस्त्वं श्रुतिपारदर्शनम् ।
यस्त्वात्ममुक्तौ नयतेत मूढधीः सह्यात्महा स्वं निनिहन्त्यसद्ग्रहात् ॥

லப்3த்4வா கத2ஞ்சிந்நரஜந்மது3ர்லப4ம் தத்ராபி பும்ஸ்த்வம் ச்ருதிபாரத3ர்சநம் । யஸ்த்வாத்மமுக்தௌ நயதேத மூட4தீ4: ஸ ஹ்யாத்மஹா ஸ்வம் விநிஹந்த்யஸத்3க்3ரஹாத் ॥

எவன் மிகவும் சிரமப்பட்டுப் பல ஜன்மங்களில் செய்யப்பட்ட புண்யகர்மாக்களால் கிடைப்பதற்கரிதான மானிடஜன்மாவை யடைந்து அதிலும் புமானுகவும் ஜனித்து வேதசாஸ்திரங்களில் தத்வார்த்தங்களையும் நன்கறிந்து இந்த ஸம்ஸாரபந்தத்திலிருந்தும் தன் ஆத்மாவை விலக்கவேண்டிய விஷயத்தில் முயற்சிசெய்யாமலிருக்கிருனே, அந்த முட்டாளானவன் அவச்யம் அறிந்து கொள்ளவேண்டிய ஆன்மஸ்வரூபத்தைவிட்டு துக்ககாமான

அஸத்விஷயங்களைக் கிரஹிப்பதால் தன்னுடைய ஆத்மாவையே அவன் ஹிம்ஸிக்கிறவனாகிறான் என்று நம் பரமாசார்யாள் வெளியிட்டிருக்கிறார்கள். பின்னும்

**अतो विमुक्त्यै प्रयतेत विद्वान् संन्यस्तबाह्यार्थसुखस्पृहस्सन् ।**

**𑌅𑌤𑍋 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑍈 𑌪𑍍𑌰𑌯𑌤𑍇𑌤 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌸𑍁𑌖𑌸𑍍𑌪𑍃𑌹𑌸𑍍𑌸𑌨𑍍 ।**

ஆகையால் அறிஞர்களாயிருப்பவர்கள் ஆபாஸமான ஸுகமிருப்பதுபோல் தோன்றுகிற வெளிப்படையாயுள்ள விஷயங்களில் இருக்கும் ஆசையை அறவே ஒழித்துவிட்டு முக்தியைப் பெறுவதற்குப் பிரயத்னம் செய்யவேண்டும் என்றும் மற்றொரு பெரியாரும் கூறியுள்ளார். இவைகளாலெல்லாம் உத்தமமான ஸத்குரு லாபம் கிடைத்தால் அவர்கள்மூலம் உபயோகமற்ற விஷயங்களை வினவாமல் பரமாத்மஸ்வரூபத்தை போதிக்கும்படி பிரார்த்திக்க வேண்டுமென்று ஏற்பட்டது.

**श्रुतिशिरोवाक्यं समाकर्ण्यताम् ।**

**𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑌿𑌰𑍋𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌸𑌮𑌾𑌕𑌰𑍍𑌣𑍍𑌯𑌤𑌾𑌮𑍍 ।**

முன்வாக்கியத்தால் ஆசார்யாள்முகமாக வந்த மோக்ஷத்திற்கு முக்யஸாதனமான பிரும்மஸ்வரூபத்தையுபதேசித்து அனுக்ரஹிக்கும்படி பிரார்த்திக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அந்த ஸ்வரூபத்தை எந்தவாக்யத்தாலுபதேசிக்கும்படி பிரார்த்திப்பது என்று நிகழும் சங்கைக்கு விடை பகருகிறார். "சுருதி சிரோ வாக்கியம் ஸமாகர்ண்யதாம்" வேதங்களுடைய சிரோரூபமாய் விளங்கும் உபநிடதங்களுடைய வாக்கியங்களால் போதிக்கும்படி பிரார்த்திக்க வேண்டும். இங்கிலீஷ், தமிழ் முதலான பாஷாகிரந்தங்களால் போதித்தால் முக்கிய பலன் ஏற்படாதென்றும், ஸாமான்யமாய்த் தான் ஏற்படும். அந்த ஜ்ஞானம் பல பர்யவஸாயியாக ஆகமாட்டாதென்றும் இதின் கருத்தாகும். இந்த அபிப்பிராயத்தையே, ஸித்தாந்தலேச ஸங்கிரஹம் என்னும் நூலில் தீக்ஷிதரவர்களும் விஸ்தாரமாக நிரூபித்திருக்கிறார்கள். சுருதியிலும் சுருதிவாக்யங்களிலிருந்தும் அறியவேண்டும் என்றும் உபநிடதங்களால் வெளியிடப்பட்ட பிர்மஸ்வரூபத்தையறிய விரும்புகிறேன் என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

स्वं बालं रोदमानं चिरतरसमयं शान्तिमानेतुमग्रे
द्राक्षां खर्जूरमात्रं सुकदलिमथ वा योजयत्यम्बिकाऽस्य ।
तद्वच्चेतोऽतिमूढं बहुजननभवान्मौढ्यसंस्कारयोगात्
बोधोपायैरनेकैरवशमुपनिषद्बोधयामास सम्यक् ॥

ஸ்வம் பாலம் ரோதமாநம் சிரதரஸமயம் சாந்திமாநேதுமக்ரே த்ராக்ஷாம் கர்ஜூரமாத்ரம் ஸுகதளிமதவா யோஜயத்யம்பிகாऽஸ்ய | தத்வச்சேதோऽதிமூடம் பஹுஜநநபவாந்மௌட்யஸம்ஸ்காரயோகாத் போதோபாயைரநேகைரவசமுபநிஷத்போதயாமாஸ ஸம்யக் ||

ஒரு தாயானவள் எப்படி வெகுகாலமாய் அழுதுகொண்டிருக்கும் தன்குழவிக்குபேரீச்சை, மாம்பழம், வாழைப்பழம் முதலியவைகளைக் கொடுத்து அழுகையை நிறுத்தி ஸந்தோஷப்படுத்துவளோ அவ்விதம் பல ஜன்மாக்களில் ஏற்பட்ட அக்ஞானகிக்யத்தால்மிகவும் மூடமாயும், தன் நிலைமையை அறியாததாயுமிருக்கும் சித்தத்திற்கு உபநிடதமென்கிற தாயானவள் பலவித ஞானோபதேசங்களைச் செய்து அக்ஞானத்தைப்போக்கி சிறந்த அறிவை (பிர்மக்ஞானத்தை) உண்டுபண்ணினுள் என்றும் பகவத்பாதாளே பின்னொரு பிரகரணத்தில் சாற்றியுள்ளார். இவைகளால் ஸத்குரு மூலமாக உபநிஷத்துக்களின் தத்வார்த்தங்களையும் உபதேசிக்கும்படி வேண்டி அவைகளால் ஆத்மஸ்வரூபஸாக்ஷாத்காரத்தைப் பெறவேண்டுமென்று போதிக்கப்படுகின்றது. சுபம்!

உபபத்திராதிபர்

---

## ஹிந்து விதவைகள் தலைமயிரை நீக்கவேண்டுமா?

19—7—28-ல் வெளிவந்த "ஹிந்து" பத்திரிகையின் 4-ம் பக்கத்தில் Social Refarm in Indin (இந்தியாவில் ஸமூஹ சீர்திருத்தம்) என்ற தலைப்பெயரின் கீழ் தற்காலம் பம்பாய்க்கடுத்த டாடாரிலிருக்கும் மிஸ்டர் R. கிருஷ்ணய்யர், பிஹார்மாகாணத்தில் "மகாத்மா" மிஸ்டர் M.K. காந்தி, கோஷா என்ற (ஸ்திரீகள் வீட்டுக்குள் அடங்கியிருக்கும்) வழக்கத்தை நிவர்த்திக்க முயற்சிப்பதாகவும், வயதுக் கிரமத்தைக் கூட கவனி

யாமல் விதவைகளை முண்டனம் செய்விக்கும் கொடிய வழக்கம் தென்னிந்தியாவில் ப்ராம்மணர்களுக்குள்ளும், மஹாராஷ்டிரதேசத்தில் தக்ஷிணப்ராம்மணர்களுக்குள்ளும் மாத்திரமிருக்கிறதென்றும் இந்தியாவின் இதர பாகங்களில் இல்லையென்றும், சென்னை மாகாணத்திலுள்ள சிறுபான்மையானவர்களும் விதவைகளுக்கு முண்டனம் செய்விக்கும் கொடிய வழக்கத்தை நிவர்த்திக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்.

உத்தரம்:— சென்ற 1926-27-ல் 6-மாஸகாலம் பண்டாரபுரம், புனா, பம்பாய், நாஸிகை, ஓங்காரம், உஜ்ஜினி, புஷ்கரம், மேற்கில் ஸோமனாதம், துவாரகையும், வடக்கில் ஹரித்வாரம், ஸ்ரீகாசி, ஆக்ரா, மதுராகோகுலப்ருந்தாவனம், டில்லி, குருக்ஷேத்திரம், நைமிசம், அயோத்தி, கயா, கல்கத்தா, கிழக்கில் ஜகந்நாதமும், யாத்திரை செய்தேன். ஹிந்து ஸ்திரீகளில் எந்த ஜாதி விதவைகளுக்கு மாத்திரம் முண்டனம் செய்விக்கிறார்களென்பதை அப்பொழுது நான் விசாரித்துத் தெரிந்துகொள்ளவேண்டிய அவசியம் நேரிடவில்லை. 28—4—28-ல் மைலாப்பூர் தேசியப்பெண் உயர்தரப் பாடசாலையில் விவாகவயது மசோதாவிற்கு ஆதரவளிப்பதற்கு கூடிய மீட்டிங்கில் (ஸ்வராஜ்யம்) மிஸ்டர் S. ஸ்ரீநிவாஸய்யங்காருடைய மனைவியால் "சென்ற வருஷம் நான் வட இந்தியாவில் மதுராபிருந்தாவனம் சென்றிருக்கையில் அவ்விடத்தில் "மேளாயெனப்படும்" உத்ஸவகாலமாயிருந்தது. அது நிமித்தம் வங்காளத்திலிருந்து அனேக ஆயிரக்கணக்கான இளம் விதவைகள் யாத்ரீகர்களாக வந்து கூடியிருந்தார்கள். அவர்களில் சுமார் 10-வயது முதல் 25-வயதிற்கு மேற்படாத இளம் சிறுமிகள் தலையை மொட்டைசெய்துவிடப்பட்டு வெள்ளை வஸ்திரம் அணிந்து கூட்டம் கூட்டமாக தெருக்களில்கோவிலுக்குச்செல்லும் காக்ஷியைக்காணமனம் சஹிக்கக்கூடாமலிருந்தது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. (சுதேசமித்திரன் 30-4-28-ல் 7-ம் பக்கம் பார்க்கவும்.) நேரில் பார்த்த ஸாக்ஷி இவ்விதம் சொல்லுகையில் இந்தியாவின் இதர பாகங்களில் விதவைகளை முண்டனம் செய்விப்பதில்லை என்று ஷை அய்யர் அவர்கள் சொல்வதை எவ்விதம் நம்புவது? இந்த அனேகஆயிரக்கணக்கான விதவைகள் யாவரும் ப்ராம்மணர்கள்தான் என்றும் இதர ஜாதி விதவைகளல்லவென்று சொல்லவும் வழியில்லை.

மிஸ்டர் கிருஷ்ணய்யர் தென்னிந்தியாவில் தென்கலை ப்ராம் மணர்கள் விதவைகளை முண்டனம் செய்யும் கோஷ்டியாருடன் சேரவில்லை என்று சொல்லுகிறார்.

உத்தரம்:— ஸ்ரீ ராமானுஜாசாரியார் கி. பி. 1017-ல் அவ தரித்தார். இவரைப் பின்பற்றியவர்கள் தென்கலையார். வேதாந் தாசார்யார் என்ற ஸ்ரீவேதாந்ததேசிகர் கி. பி. 1270-ல் அதாவது ஸ்ரீ ராமானுஜர் அவதரித்த 253-வருஷங்களுக்குப்பிறகு அவதரித் தார். இவர் ஸ்ரீ ராமானுஜாசார்யாருடைய விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை (reformed) சீர்திருத்தினார். அதாவது புராதன ஸ்மார்த்தாசாரத்துக்குத் திருப்பினார். ஸ்ரீ வேதாந்ததேசிகரைப் போலல்லாது, தற்காலத்தில் இந்திய ஸமூஹ சீர்திருத்தக்கார ர்கள் (Indian Social Reformers) என்ற போலிப் பெயரைத் தாங்கி நமது புராதன வைதிகமதத்தையும், ஆசாரானுஷ்டானங் களையும் கெடுக்க முயன்று வரும் கோடரிக் காம்புகளை இந்திய ஸமூஹ சீர்கேடர்கள் (Indian Social Deforamers) என்று தான் நாம் சொல்லுவோம். தேசிகரைப் பின்பற்றியவர்களு க்கு வடகலையார் என்று பெயர். இவர்கள் ஸ்மிருதிகளில் சொல் லிய ஆசாரங்களை உறுதியுடன் அனுஷ்டிப்பவர்கள். தென்கலை யாருக்கும், வடகலையாருக்கும் கொள்வனை, கொடுப்பனை உண்டு. ஒரு தென்கலை வகுப்புப் பெண் வடகலைப் புருஷனுக்கு வாழ்க் கைப்பட்டு விதவையாக நேரிட்டால் கண்டிப்பாய் முண்டனம் செய்தே தீரவேண்டும். ஸ்மார்த்த (பெரும்பாலும் அத்வைதி) ப்ராம்மணர்களுக்குள் இவ்வழக்கம் தொன்றுதொட்டு எண்ணி றந்த கலமாய் அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. ஸ்ரீ மத்வா சாரியார் கி. பி. 1199-ல் அவதரித்தார். இவரைப் பின்பற்றிய த்வைதிகளும் இவ்வழக்கத்தை அனுசரித்து வருகிறார்கள். வை சிய (கோமுட்டி) ஜாதியாரும் இதை அனுஸரித்து வருகிறார்கள். ஆகையால் விதவையான ஸ்திரீக்கு சிகையை விஸர்ஜனம் செய்வதென்பது புராதனமும், நன்மையைத் தரத்தக்கதுமான அனுஷ்டானமென்று நிச்சயிக்க வேண்டியிருக்கிறது, இவ்வழக் கத்தை நவீன இந்திய ஸமூஹ சீர்கேடர்கள் 40-வருஷகாலமாக நிந்தித்து வருகிறார்கள்.

இந்தக் குரூர வழக்கத்துக்கு என்ன ஆதாரமிருந்த போதி லும், ஸம்போக வயது உயர்த்தப்பட்டும் விதவைகளின் மறு

மணம் பிரதி வருஷமும் அதிகரித்து வரும் இந்த இருபதாம் நூற்றுண்டில் இதை இனிமேலும் நடத்துவர இடங்கொடுக்கக்கூடாதென்றும் இதை நிறுத்துவதற்கு ஜாதிப்ரஷ்டம் செய்வார்களென்ற பயமும் அறிமையாயும் தான் முக்கிய தடைகளாக குறுக்கிடுகின்றன வென்றும் ஷை அய்யர் சொல்லுகிறுர்.

உத்தரம்:— 1925-ம் வருஷத்தில் ஏற்பட்ட சட்டம் ஒன்றுல் விவாகமான பெண்களுக்கு ஸம்போக வயது 13-என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தின் கீழ் இதுவரையில் எத்தனை கேஸ்கள் கோர்ட்டுக்கு வந்திருக்கின்றனவென்பதை அய்யர் நமக்குச் சொல்லட்டும். விதவையை மறுமணம் செய்து பிறக்கும் பிள்ளை விதவா விவாகச்சட்டத்தின்படி பெற்றோர்களின் சொத்துகளுக்கு பாத்தியஸ்தனுவான், ஆனுல் ஹிந்துமத தர்ம சாஸ்திரத்தின்படி தன் பெற்றோர்களுக்கு கர்மம் செய்ய அர்ஹதையற்றவன்! ஹிந்துமதத்தில் பற்றுள்ளவர்கள் இவர்களை ஆர்ய ஸமாஜிகளையும், ப்ரம்மஸமாஜிகளையும்போலத்தான் நினைக்கிறுர்கள். எந்த அரசாங்கமாவது இவர்களுடன் ஸமபந்தி போஜனம், கொள்வனை, கொடுப்பனையும் செய்யுமபடி மற்றவர்களை கட்டாயப்படுத்தி இவர்களை ஜாதிப்ரஷ்டத் தன்மையிலிருந்து விடுவிக்கத் துணியுமா? புராதனமும், நன்மையைத் தரத்தக்கதுமான மதத்தை அனுஷ்டித்து வரும் ஸொந்த ஜனங்களைக் காட்டிலும் தாங்கள் கெட்டிக்காரர்களென்றும், விவேகிகளென்றும், நினைத்து வரம்பை மீறுகிறவர்கள் பஹிஷ்காரத்தால் ஏற்படும் கஷ்டங்களை மௌனமாய் அனுபவிக்கத்தான் வேண்டும். இவர்களுடைய கொள்கைக் கிணங்காத மற்றவர்களையும் தங்களுடைய வலைக்குள்ளிழுக்க இவர்கள் ஏன் முயற்சிக்க வேண்டும. விவாஹமாகாத கன்னிகைகள் தாராளமாகக் கிடைத்து விவாஹம் செய்துகொள்ளவான்கள் கிடைப்பது கஷ்டமாயிருக்கையில், விதவைகளை மணம் செய்துகொள்ளும்புருஷர்களின் அந்தஸ்து எத்தன்மையுடையது?

இந்த குரூரமான வழக்கதுக்கு ஏதேனும் சாஸ்திரத்தில் ஆதாரமிருக்கிறதாவென்று தான அமனகம்பெரியோர்களைக் கேட்டதாகவும, அவர்கள் இது முன்னேர்கள் நாள் முதல் பரம்பரையாய் அநுஷ்டிக்கப்பட்டு வருவதைத் தவிர தகுந்த ஆதாரமிருப்

பதாகத்தெரியவில்லை யென்று கூறியதாகவும், இதற்கு ஏதேனும் சாஸ்திரப்ரமாணம் இருப்பதாகத் தெரிவித்தால் அதைத்தான் ஏற்றுக்கொள்வதாகவும் மிஸ்டர் அய்யர் கூறுகிறார். இந்த உத்கிருஷ்டமான வழக்கத்துக்கு சாஸ்திரததில் ஆதாரமிருக்கிற தென்பதை ருஜூப்பிக்கும் பொருட்டு அடியிற் கண்ட வசனத்தை இங்கு குறிப்பிடுகிறேன்.

विधवाकबरीबन्धो भर्तृबन्धाय जायते ।
शिरसो वपनं तस्मात्कार्यं विधवया सदा ॥

விதவாகபரீபந்தோ பர்த்ருபந்தாய ஜாயதே ।
ஸிரஸோ வபநம் தஸ்மாத்கார்யம் விதவயா ஸதா ॥

விதவை தன் கூந்தலை முடிதல் இறந்துபோன கணவனைக் கட்டுகிறது. (நற்கதி அடையவொட்டாமல் தடை செய்கிறது.) ஆகையால் விதவை எப்பொழுதும் முண்டனம செய்துகொளள வேண்டும். இந்த வசனத்தையும், விதவைகளுக்கேற்பட்ட இதா தர்மங்களைக் குறிக்கும் வசனங்களையும், அடியிற்கண்ட கிரந்தங்களில் "விதவாதர்மம்" என்ற தலைப்பெயரினடியில் காண்க:—

பக்கம் 440-நிர்ணயஸிந்து, நிர்ணயஸாகர பிரஸ் பதிப்பு, பம்பாய் 1926. பக்கம் 363-தர்மஸிந்து, ஜனார்தன மஹாதேவ கூர்ஜர் பதிப்பு, பம்பாய் 1904. பக்கம் 110, ஸம்ஸ்காரமயூகம், குஜராத்தி பிரஸ் பதிப்பு, பம்பாய் 1913. பக்கம் 416-வைத்தியநாத தீக்ஷிதீயம் வர்ணாச்ரம தர்ம காண்டம் ஸம்ஸ்கிருதமும், தமிழ் மொழி பெயர்ப்பும் சிதம்பரம்,

ஷை அய்யர் அவர்களுக்கு நான் கடைசியாக சொல்ல விரும்புவது யாதெனில் ஷை நிபந்த கர்த்தாக்கள் 4-பேர்களில் முதல மூவர் வட இந்தியாவைச் சேர்ந்தவர்களென்பதும், கடைசி ஒருவர் மாத்திரம் தென இந்தியாவைச் சேர்ந்தவரெனபதும். ஆகையால் இந்த கிரந்தங்கள் ஹிமாசலம் முதல் கன்யாகுமாரி வரையிலுமுள்ள ஸமஸ்த ஹிந்துக்களுக்கும் பொதுவென்பதுந்தான்.

T. S நடேசசாஸ்திரியார்
வால்மீகி. மாயவரம்,

ஸ்ரீ 𑌗𑍁𑌰𑍁𑌭𑍍𑌯𑍋 𑌨𑌮𑌃 ।

# ஸந்தியாவந்தனம்.

ஆரியர்களே ! சுருதி ஸ்மிருதிகளால் விதிக்கப்பட்ட கர்மங்கள் பலவிருக்க ஸந்தியாவந்தனமென்னும் கர்மத்தைப் பற்றிஎழுத வேண்டிய காரணங்கள் பல உள. முதலாவதாக, இந்தக் கர்மமே எல்லாக் கர்மங்களுக்கும் அஸ்திவாரம் போன்றது. நாம் யாகம், வேதாத்யயனம் முதலிய மற்ற எந்த கர்மங்களைச் செய்யும் முன்னரும் ஸந்தியாவந்தனத்தைச் செய்தே அவைகளைத் துவக்க வேண்டும். அம்மாதிரி செய்யாவிடில் மகா அனர்த்தம் நேரிடும்.

योऽन्यत्र कुरुते यत्नं धर्मकार्ये द्विजोत्तमः ।
विहाय सन्ध्याप्रणतिं स याति नरकायुतम् ॥

𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌯𑌤𑍍𑌨𑌂 𑌧𑌰𑍍𑌮𑌕𑌾𑌰𑍍𑌯𑍇 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ।
𑌵𑌿𑌹𑌾𑌯 𑌸𑌂𑌧𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌣𑌤𑌿𑌂 𑌸 𑌯𑌾𑌤𑌿 𑌨𑌰𑌕𑌾𑌯𑍁𑌤𑌮𑍍 ॥

அர்த்தம் — எந்த பிராமணசிரேஷ்டன் ஸந்தியாவந்தனத்தைச் செய்யாமல் விட்டு விட்டு வேறு தர்மகாரியங்களில் பிரவர்த்திக்கிறானோ, அவன் ஆயிரக்கணக்கான நரகங்களை அடைகிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டாவதாக,

परिहायापि वेदांस्त्रीन् साङ्गांश्च सपदक्रमान् ।
गायत्रीमात्रसारोऽपि वरो विप्रो न संशयः ॥

𑌪𑌰𑌿𑌹𑌾𑌯𑌾𑌪𑌿 𑌵𑍇𑌦𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌨𑍍 𑌸𑌾𑌙𑍍𑌗𑌾𑌂𑌶𑍍𑌚 𑌸𑌪𑌦𑌕𑍍𑌰𑌮𑌾𑌨𑍍 ।
𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀𑌮𑌾𑌤𑍍𑌰𑌸𑌾𑌰𑍋𑌽𑌪𑌿 𑌵𑌰𑍋 𑌵𑌿𑌪𑍍𑌰𑍋 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 ॥

“சிக்ஷை, வியாகரணம், கல்பம், நிருக்தம், சந்தஸ், ஜோதிஷம்என்ற ஆறு அங்கங்களுடனும் பதம், கிரமம், கனம் முதலியவைகளுடனும் கூடின மூன்று வேதங்களையும் அத்யயனம் செய்யாமல் விட்டுவிடினும், காயத்ரீ ஜபரூபமான ஸந்தியாவந்தனத்தை மாத்திரம் செய்து வருவானாகில் அவன் சிறந்த பிராமணன் என்பதில் ஐயமில்லை’’ என்று வேதங்களை விட்டாலும் விடலாம், ஸந்தியாவந்தனத்தை விடக்கூடாது என்று சொல்லப்பட்டிருப்பதால் ஸந்தியாவந்தனத்தின் மஹிமையைப்பாருங்கள்.

மூன்றாவதாக, அடியிற்கண்ட சரித்திரத்தாலும் ஸந்தியாவந்தனத்தின் மஹிமை நன்கு விளங்கும். கொஞ்சகாலத்திற்கு முன்னர் அனந்தசயனத்தில் காலபுருஷதானம் என்ற ஓர் தானம் அவ்வூர் அரசனால் ஏற்படுத்தப்பட்டது. அதாவது கருப்புக்கம்பளியால் ஓர் புருஷ பிம்பம் செய்து அது நிறைய பவுன்களைக்கட்டி அதன் கையில் ஓர் கத்தியையும் கொடுத்து, அதில் யமதர்மராஜாவை ஆவாஹனம் செய்யப்பட்டது. அந்த ஏராளமான பவுன்களைப் பெறுவதற்கு விரும்புகிறவர்கள் அந்த பிம்பத்தை அடைந்து பெற்றுக் கொள்ளவேண்டுமென்று விளம்பரம் செய்தான். ஆவாஹனத்தின் சிறப்பினாலும், மந்திரத்தின் பிரபாவத்தாலும், கால புருஷனின் ஸாந்நித்யம் அந்த பிம்பத்தில் அதிகரித்து நின்றபடியால், பவுன் ஆசை கொண்டு அங்கு வரும் எந்த வேத சாஸ்திர பாரங்கதரான வித்வானையும் குறித்து அது மூன்று விரல்களைக் காட்டிற்று. பண்டிதர்களோ மூன்று விரலைக்காட்டும் பதுமையைப் பார்த்து அதன் பொருள் விளங்காதவர்களாய்ப் பயந்து ஓடி விட்டனர். வெகு காலம் கழிந்த பின்னர் யாதொரு படிப்பு இல்லாமலும் ஆனால் தினந்தோறும் ஸந்தியாவந்தனத்தை மாத்திரம் ஒழுங்காகச் செய்துவந்த ஓர் பிராம்மணன் அங்கு வந்தான். அவனைக் கண்டதும் 'மந்திரசக்தி தபோமஹிமையுள்ள பெரியோர்களே திண்டாடும்போது இவனால் என்ன ஆகப்போகிறது' என்று ஜனங்கள் பரிஹஸித்தார்கள். அப்படியிருந்தாலும் அவன் தைர்யமாய் அந்தக்காலபுருஷனைத் தரிசித்தான். உடனே அது வழக்கம்போல் மூன்று விரல்களை உயரத்தூக்கியது. பிராமணன் அஞ்சாமல் ' அப்படிச் செய்யமுடியாது ' என்றான். அந்த விக்ரஹம் இரண்டுவிரல்களைக் காட்டியது. அதற்கும் அவன் ' முடியாது ' என்று பதில் சொன்னான். பிறகு கொஞ்சம் வருத்தத்துடன் ஒரு விரலை மெள்ளத்தூக்கிற்று. பிராமணனும் ' சரி கொடுத்துவிட்டேன் ' என்றான். உடனே அது கத்தியைக்கீழே எறிந்துவிட்டு அந்தர்த்தானமடைந்தது. பிராமணனும் பவுன்களை வாரிக்கொண்டுபோனான். *

இக்கதையால் நாம் அறியவேண்டியது யாது? அந்த உருவம் மூன்றுவிரல்களைக் காட்டியதின் அர்த்தம் என்னவென்றால்,

---

* இந்தக்கதை கட்டுக்கதையல்ல. உண்மையாகவே நிகழ்ந்தது. நமது நேயர்களும் பெரியோர்கள்மூலமாய்க் கேட்டிருக்கலாம்.

காலம் தவறாமலும் சாஸ்திரோக்தமாயும் ஸந்தியாவந்தனத்தை மூன்றுவேளைகளிலும் செய்திருந்தால் அந்த மூன்றுவேளைசெய்த பலனையும் எனக்கு அர்ப்பணம் செய்யவேண்டும் என்பதே. அதற்கு அந்தப்பிராமணன் ஸம்மதிக்கவில்லை. ஆகையால் இரண்டு விரல்களைக்காட்டி இரண்டுவேளைப்பலனை யாசித்தது. அதற்கும் அவன் உடன்படவில்லை. கடைசியாக ஒருவேளைப் பலனையாவது கொடுத்துவிடும்படி ஒரு விரலைக் காட்டியது. அவனும் சம்மதித்து தன் ஸந்தியாவந்தனத்தின் ஒருவேளைப்பலனைக்கொடுத்து விட்டுப் பவுன்களை அடைந்தான். இது நிற்க, அந்தக் காலபுருஷனின் உருவம், பவுன்களுக்குப்பதிலாக மற்ற யாதொன்றையும் கேட்காமல் ஸந்தியாவந்தனத்தின் பலனைக்கேட்டது பார்த்தீர்களா! இதனால் ஸந்தியாவந்தனம் சிறந்த கர்மமென்று விளங்குவதால் அதைப்பற்றி யாம் எழுதுவதும் நன்றே.

நான்காவதாக, நாம் கலியின்வலையில் சிக்காவண்ணம் நமது முன்னோர்கள் கலியின் கொடுமையைப்பற்றி பல்லாயிரம் வருஷங்களுக்குமுன்னரே தாங்கள் நேரில் கண்டதுபோல் ஞானதிருஷ்டியால் பாகவத துவாதசஸ்கந்தம் முதலிய நூல்களில் விஸ்தாரமாக விளக்கியிருக்கின்றனர். அப்படி எச்சரிக்கப்பட்டும் பலர் ஏமாந்துபோய் ஸ்னானம் ஸந்தியாவந்தனம் முதலிய நித்யகர்மங்களைச் செய்யாமல் விட்டுவிட்டதுமன்னியில், அவைகளைவிதிக்கும் சுருதிஸ்மிருதிகளையும் ஸ்மிருதிகர்த்தாக்களையும் தற்கால நாகரீகத் தேர்ச்சியினால் நிந்திக்கின்றனர். இது நிற்க, நமது சிறுவர்களின் சிரத்தை எவ்வாறு இருக்கிறதென்று பார்ப்போம். அவர்கள் உபநயனமாகும்போதே ஸந்தியாவந்தனத்தைப் புரோஹிதரிடம் ஒப்புவித்துவிடுகின்றனர். தகப்பனார் ‘ஸந்தி செய்தாயா?’ என்று கேட்டால், ‘ஆம், அந்தக் குளத்தில் செய்துவிட்டேன்’ என்பார்கள். தகப்பனார் ‘அடே! அந்தக் குளத்தில் ஜலம் இல்லையே எப்படி ஸந்தியாவந்தனம் செய்தாய்?’ என்று மீண்டும் கேட்டால் ‘அங்கு ஜலம் இருந்ததென்று அண்டைவீட்டு ராமு சொன்னானே’ என்று பதில் கூறுகிறார்கள். நம் சிறுவர்களின் மனப்பான்மை இவ்வாறாகவிருக்கப்பெற்றோர்களின் சிரத்தையை விசாரிப்போம். உபநயனமானது முதல் தினந்தோறும் ஸந்தி செய்ய வேண்டுமென்று ஊக்கமுடைய சிறுவன் அதன் அனுஷ்டானவிஷயத்தில் ஏதாவதொரு ஸந்தேஹத்தைப் பரிஹரிக்குமாறு வேண்டினால்,

தகப்பனார், 'அடே! நேற்று உபநயனமான உனக்கே மறந்து போனால் உபநயனமாகி எத்தனையோ யுகங்களைக்கழித்த எனக்கு எப்படி ஞாபகமிருக்கும்? உன் வாத்தியாரைக் கேள்' என்று அதிகாரம் செய்கிறார்.

மற்றும் சிலர் இக்காலத்தில் பலவித உத்யோகங்களில் அமர்ந்திருப்பதால் ஸந்தியாவந்தனத்திற்கு அவகாசமில்லை என்றும், இன்னும் பல சோம்பேரித்தனமான காரணங்களையும் சொல்லி ஸந்தியாவந்தன விஷயமாகப்பல குதர்க்கங்களைச்செய்து வருவதால், அவைகளையும் அவைகளுக்கு உசிதமானபதில்களையும் எம்சிற்றறிவுக்கேற்றபடி எழுதவே இவ்விஷயமாகப் பவர்த்தித்தது.

## ஸந்தியாவந்தனம் என்றால் என்ன ?

उपास्तिः सन्धौ सूर्यस्य निशायां दिवसस्य च ।
तामेव सन्ध्यां तस्मात्तु प्रवदन्ति महर्षयः ॥

𑌉𑌪𑌾𑌸𑍍𑌤𑌿𑌃 𑌸𑌨𑍍𑌧𑍌 𑌸𑍂𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨𑌿𑌶𑌾𑌯𑌾𑌂 𑌦𑌿𑌵𑌸𑌸𑍍𑌯 𑌚 ।
𑌤𑌾𑌮𑍇𑌵 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌮𑌹𑌰𑍍𑌷𑌯𑌃 ॥

பகலும் இரவும் ஸந்திக்கும் காலம் ஸந்தியாகாலம் எனப்படும். இக்காலம் ஒவ்வொருநாளிலும் காலையிலும் மாலையிலும் ஸம்பவிக்கிறது. அதாவது காலையில் நக்ஷத்திரங்கள் மறைவதற்கு ஆரம்பிக்கும்முதல் சூரியன் உதயமாகும்வரையிலும், மாலையில் சூரியன் பாதி மறைந்து நக்ஷத்திரங்கள் காணப்படும்வரையிலும், இரண்டு ஸந்தியாகாலங்களாகும். இப்பேர்ப்பட்ட காலங்களில் சூரியாந்தர்க்கத பகவானைக்குறித்து சாஸ்திரங்களில் கூறப்பட்ட விதியை யனுஸரித்துச் செய்யப்படும் ஸ்தோத்திரம், நமஸ்காரம் முதலிய கர்மாக்களுக்கு ஸந்தியாவந்தனம் என்று பெயர்.

वदिअभिवादनस्तुत्योः । 𑌵𑌦𑌿𑌅𑌭𑌿𑌵𑌾𑌦𑌨𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌯𑍋𑌃 ।

என்ற தாதுபாடத்தைக் கவனிக்க.

सन्धीयते सम्पदा यजमानः अनया इति सन्ध्या ।

𑌸𑌨𑍍𑌧𑍀𑌯𑌤𑍇 𑌸𑌮𑍍𑌪𑌦𑌾 𑌯𑌜𑌮𑌾𑌨𑌃 𑌅𑌨𑌯𑌾 𑌇𑌤𑌿 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾 ।

என்ற விக்ரஹத்தாலும் இச்சந்தியாவந்தனம் செய்துவருவதால் ஸகல ஐஹிக ஆமுஷ்மிக ஐசுவர்யங்களும் உண்டாகின்றன என்று விளங்குகிறது. (இன்னும் வரும்)

M. ராமராவ், உபாத்தியாயர்,
டவுன் ஹைஸ்கூல் கும்பகோணம்.